

சென்னை அடையாறு காமராசர் அவென்யூவில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தனது குடும்பத்தாருடன் சென்று, வரிசையில் நின்று வாக்களித்தார்.



மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள், தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், கலிங்கப்பட்டியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



சிவகங்கை மாவட்டம் கண்டனூர் சிட்டாள் ஆச்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி தனது வாக்கினை செலுத்தினார்.



சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் தனது வாக்கினை பதிவு செய்தார்.



மக்கள் நீதி மய்யம் கட்சித்தலைவர் கமல் ஹாசன் எம்.பி. அவர்கள், தனது மகள் ஸ்ருதிஹாசனுடன் வந்து சென்னை எல்டாம்ஸ் ரோடு, திருவள்ளுவர் சாலை சந்திப்பில் இருக்கும் சென்னை உயர்நிலைப்பள்ளியில், தன்னுடைய வாக்கை பதிவு செய்தார்.



திருச்சி வெஸ்டரிபள்ளி மைதானத்தில் உள்ள வாக்கு சாவடியில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அவர்கள் தமது வாக்கை பதிவு செய்தார்.



தேனி மாவட்டம் போடி தொகுதி கழக வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பெரியகுளத்தில் உள்ள செவன்த்டே மெட்ரிக் பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி அரளிக்கோட்டையில் வேட்பாளர் அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் வாக்களித்தார்



குன்றத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தனது வாக்கை பதிவு செய்தார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி ஆவடி மாநகராட்சி காமராஜர் நகரில் உள்ள தனியார் பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் ஆவடி சட்டமன்ற தொகுதி வேட்பாளருமான அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தனது வாக்கினை குடும்பத்தினருடன் செலுத்தினார்.



உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் க. சுந்தர். சாலவாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.



சென்னை நந்தனம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன், மற்றும் அவரது குடும்பத்தினர் வாக்குச் செலுத்தினர்.




மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன் திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மங்களபுரம் அரசு தொடக்கப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் தனது வாக்கினை செலுத்தினார்.



மன்னார்குடி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் முனைவர்.டி.ஆர்.பி. ராஜா தளிக்கோட்டை வாக்குச்சாவடி மையத்தில் தனது குடும்பத்துடன் சென்று வாக்கினை பதிவு செய்தார்.



திருவாரூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் பூண்டி.கே.கலைவாணன் தனது வாக்கினை கொரடாச்சேரி ஒன்றியம் கமுகக்குடி அரசு பள்ளியில் பதிவு செய்தார்.